www.Padasalai.Net www.TrbTnpsc.com

Vnr12Acc

விருதுநகர் மாவட்டம்
அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

பன்னிரண்டாம் வகுப்பு
கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

பிரிவு – அ

20 X 1 = 20

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. நிலை அறிக்கை ஒரு
அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு

2. கடனாளிகளின் தொடக்க இருப்பு ₹ 30,000. ரொக்கம் பெற்றது ₹ 1,00,000. கடன் விற்பனை ₹ 90,000. கடனாளிகள் இறுதியிருப்பு
அ) ₹ 30,000 ஆ) ₹ 1,30,000 இ) ₹ 40,000 ஈ) ₹ 20,000

3. சரிகட்டப்பட்ட இறுதிமுதல் = இறுதிமுதல் + ———— – கூடுதல் முதல்.
அ) முதல் மீது வட்டி ஆ) தொடக்க முதல் இ) எடுப்பு மீது வட்டி ஈ) எடுப்புகள்

4. குறிப்பிட்ட காரணத்துக்காக பெறப்பட்ட நன்கொடை ஒரு
அ) வருவாயின வரவு ஆ) முதலின வரவு இ) வருவாயின செலவு ஈ) முதலின செலவு

5. பரிசு நிதி ₹ 60,000. பரிசு நிதிக்கான வட்டி ₹ 6,000. பரிசு அளித்தது ₹ 8,000. எனில் பொறுப்புகள் பக்கத்தில் தோன்றும் தொகை
அ) ₹ 48,000 ஆ) ₹ 68,000 இ) ₹ 58,000 ஈ) ₹ 60,000

6. நடப்பு ஆண்டின் சந்தா நிலுவை, ஆனால் பெறப்படாதது என்பது ஒரு
அ) சொத்து ஆ) பொறுப்பு இ) செலவு ஈ) முதலின செலவு

7. ஒவ்வொரு மாதமும் இடையில் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒரு கூட்டாளி எடுப்பாக, எடுக்கும் பொழுது, எடுப்பு மீது வட்டி கணக்கிடுவதற்கான சராசரி காலம்
அ) 5.5 மாதங்கள் ஆ) 6 மாதங்கள் இ) 12 மாதங்கள் ஈ) 6.5 மாதங்கள்

8. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத பொழுது, கூட்டாளிகள் இலாபத்தை பகிர்ந்து கொள்ளும் விகிதம்
அ) சமமான விகிதம் ஆ) முதல் விகிதம் இ) அ மற்றும் ஆ இரண்டும் ஈ) எதுவுமில்லை

9. கீழ்க்காணும் எந்த சூழ்நிலையில் நற்பெயர் மதிப்பு ஒரு கூட்டாண்மையில் கணக்கிடப்படும்
அ) கூட்டாளி சேர்ப்பின் பொழுது ஆ) கூட்டாளி விலகலின் போது
இ) கூட்டாண்மை கலைக்கப்படும் பொழுது ஈ) மேற்சொன்ன அனைத்தும்

10. சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் x ————
அ) சராசரி இலாபம் ஆ) உயர் இலாபம் இ) நிகர இலாபம் ஈ) எதிர்பார்க்கப்பட்ட வருமானம்

11. பகிர்ந்து தரா நட்டம் இருப்புநிலைக் குறிப்பில், இலாப-நட்ட க/கு என ———— பக்கத்தில் தோன்றும்.
அ) பொறுப்புகள் ஆ) சொத்துக்கள் இ) பற்று ஈ) வரவு

12. Jயும் Kயும் 5:3 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்தனர். அவர்கள் 'S' என்பவரை 1/5 பங்கு கூட்டுக்கு கூட்டாளியாக சேர்த்தனர். தியாக விகிதம்
அ) 1:3 ஆ) 3:1 இ) 5:3 ஈ) 3:5

13. முகமதிப்பை விட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
அ) பத்திர முனைமக் கணக்கு ஆ) அழைப்பு முன்பணக் கணக்கு
இ) பங்கு முதல் கணக்கு ஈ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு

14. நிறுமக் கலைப்பின் போது மட்டுமே அழைக்கப்படக் கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்
அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆ) அழைக்கப்பட்ட முதல் இ) முதலின காப்பு ஈ) காப்பு முதல்

15. ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனை ₹ 1,25,000 லிருந்து ₹ 1,50,000க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது.
அ) +20% ஆ) +120% இ) –120% ஈ) –20%

16. பொது அளவு அறிக்கைகள் ———— பத்திகளுடன் தயாரிக்கப்படுகின்றன.
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஆறு

17. புற–அக பொறுப்புகள் அளவிடுவது
அ) குறுகிய கால கடன் தீர்க்கும் திறன் ஆ) நீண்ட கால கடன் தீர்க்கும் திறன்
இ இலாபம் ஈட்டும் திறன் ஈ) செயல்திறன்

18. விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை
அ) மொத்த இலாபம் – நேரடிச் செலவுகள்
ஆ) கொள்முதல் செய்த சரக்கு + சரக்கிருப்பு + நேரடிச் செலவுகள்
இ) கொள்முதல் செய்த சரக்கு + சரக்கிருப்பு – மறைமுகச் செலவுகள்
ஈ) சரக்கிருப்பு + மறைமுகச் செலவுகள்

19. ரொக்க கணக்கு மற்றும் வங்கி கணக்கு ஆகிய இரண்டும் உள்ளடக்கிய நடவடிக்கைகள் ———— கொண்டு பதியப்படுகிறது.
அ) கொள்முதல் சான்றாவணம் ஆ) எதிர்பதிவு சான்றாவணம்
இ) விற்பனை சான்றாவணம் ஈ) உரிய குறிப்பீட்டு சான்றாவணம்

20. ———— ரொக்கம் மற்றும் கடன் சரக்கு கொள்முதல் பதிவதற்கு பயன்படுத்தப்படுகிறது.
அ) கொள்முதல் சான்றாவணம் ஆ) விற்பனை சான்றவாணம்
இ) உரிய குறிப்பீட்டு சான்றாவணம் ஈ) எதிர்பதிவு சான்றாவணம்

பிரிவு – ஆ

7 X 2 = 14

II. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண். 30க்கு கட்டாயம் விடையளிக்கவும்:

21. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?
22. உயில் கொடை என்றால் என்ன?
23. தியாக விகிதம் என்றால் என்ன?
24. தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன?
25. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளை பட்டியலிடவும்.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



26. இலாபம் அல்லது நட்டம் காண்க: தொடக்க முதல் ₹ 5,00,000; இறுதி முதல் ₹ 8,50,000 கூடுதல் முதல் ₹ 1,20,000 எடுப்புகள் ₹ 70,000.
27. A மற்றும் B எனும் கூட்டாளி 3:2 விகிதத்தில் இலாபம் பகிர்ந்தனர். அவர்கள் C என்பவரை 1/5 கூட்டுக்கு கூட்டாளியாக சேர்த்தனர். புதிய இலாப விகிதம் கணக்கிடுக.
28. ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு 2014 ₹ 4,000; 2015 ₹ 3,000; 2016 ₹ 5,000; 2017 ₹ 4,500; மற்றும் 2018 ₹ 3,500 சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
29. சாரா நிறுமம் பங்கொன்று ₹ 10 வீதம், 10,000 நேர்மைப் பங்குகளை ₹ 2 முனைமத்துடன் விண்ணப்பத்தின் போது முழுத்தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவு தருக.
30. பின்வரும் தகவல்களிலிருந்து மொத்த இலாப விகிதம் கணக்கிடவும். விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹ 5,00,000 விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்க்கான அடக்க விலை ₹ 4,20,000 கொள்முதல் ₹ 3,60,000.

## பிரிவு – III

III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்: 7 X 3 = 21

31. இரட்டைப் பதிவு முறை மற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
32. உயர் இலாப முறையில் நற்பெயர் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?
33. கணினியமக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் மூன்றினை விளக்கவும்.
34. முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மைப் பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறவும்.
35. பின்வரும் விவரங்களிலிருந்து பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கினைத் தயாரித்து, கடனாளிகளிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டினைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்க பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |
| இறுதி பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 30,000 |
| மாற்றுச்சீட்டிற்கான ரொக்கம் பெற்றது | 60,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 5,000 |

36. பின்வரும் விவரங்களிலிருந்து 2017 மார்ச் 31 ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினை கணக்கிடவும்.

| சந்தா பெற்றது | ₹ | |
|---|---|---|
| 2015–16 | 7,500 | |
| 2016–17 | 60,000 | |
| 2017–18 | 1,500 | |
| | | 69,000 |

2016–17 ம் ஆண்டில் பெறவேண்டிய சந்தா ₹ 2,400.
2016–17 ம் ஆண்டிற்கான சந்தா 2015–16 ம் ஆண்டில் பெற்றது ₹ 1,000.

37. 2015 ஜனவரி 1ல் A மற்றும் B என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகள் முறையே ₹ 50,000 மற்றும் ₹ 40,000 இருப்பினைக் காட்டியது. 2015 அக்டோபர் 1 அன்று 'A' கூடுதல் முதலாக ₹ 10,000 கொண்டு வந்தார் மற்றும் 2015 மே 1 ல் B கொண்டு வந்த கூடுதல் முதல் ₹ 9,000. 2015 டிசம்பர் 31 நாளோடு முடியும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடவும்.
38. அஞ்சலி மற்றும் நித்யா என்ற கூட்டாளிகள் இலாப–நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் பிரமிளா என்பவரை 1.1.2018 அன்று கூட்டாளியாகச் சேர்த்தனர். அந்நாளில் அவர்களின் இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்தில் பகிர்ந்து தரா நட்டம் ₹ 80,000 ஆக இருந்தது. சேர்ப்பின் போது பகிர்ந்து தரா நட்டத்தை பகிர்வதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.
39. பின்வரும் விவரங்களிலிருந்து மேரி வரையறு நிறுமத்தின் ஒப்பிட்டு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| விவரம் | 2015–16 ₹ | 2016–17 ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 4,00,000 | 5,00,000 |
| இயக்கச் செலவுகள் | 2,00,000 | 1,80,000 |
| வருமான வரி [வரிக்கு முன் இலாபத்தில் %] | 20 | 20 |

40. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆனந்த் கட்டுமான நிறுமத்தின் தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| மொத்த நடப்புப் பொறுப்புகள் | 2,00,000 |
| மொத்த நடப்புச் சொத்துகள் | 5,00,000 |
| சரக்கிருப்பு | 90,000 |
| முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 10,000 |

## பிரிவு – ஈ

IV. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 7 X 5 = 35

41. அ) பின்வரும் விவரங்களிலிருந்து தேவையான கணக்குகளை தயாரித்து மொத்த விற்பனை மற்றும் மொத்த கொள்முதல் கணக்கிடவும்.

| விவரம் | ஏப்ரல் 1, 2018 | மார்ச் 31, 2019 |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 2,40,000 | 2,20,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 30,000 | 8,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,20,000 | 1,50,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 10,000 | 20,000 |

பிற தகவல்கள்:
கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ₹ 6,00,000
வாடிக்கையாளருக்கு அளித்த தள்ளுபடி ₹ 25,000
கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் ₹ 3,20,000

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



சரக்களித்தோரால் அளிக்கப்பட்ட தள்ளுபடி ₹ 10,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்குச் செலுத்தியது ₹ 30,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது ₹ 60,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது ₹ 4,000
வாராகடன் ரூ.16,000

(அல்லது)

ஆ) ஒரு மன்றத்திற்கு தொடர்புடைய பின்வரும் விவரங்களிலிருந்து 2016 ம் ஆண்டில் சந்தா மூலம் பெறும் வருவாயைக் கணக்கிடவும்.

| விவரம் | 1.1.2016 ₹ | 31.12.2016 ₹ |
|---|---|---|
| சந்தா பெற வேண்டியது | 3,000 | 5,000 |
| முன் கூட்டிப் பெற்ற சந்தா | 4,000 | 7,000 |

2016 –ம் ஆண்டில் சந்தா பெற்றது ₹ 45,000.

42. அ) கீழ்க்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019 மார்ச் 31–ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினைக் கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கயிருப்பு: | | | |
| கை ரொக்கம் | 14,000 | சம்பளம் | 20,000 |
| வட்டிப் பெற்றது | 5,000 | வாடகை | 24,000 |
| சந்தா | 55,000 | பயணச் செலவுகள் | 2,000 |
| உயில்கொடை | 48,000 | அச்சு மற்றும் எழுதுபொருள் | 6,000 |
| நுழைவுக் கட்டணம் | 7,000 | முதலீடுகள் செய்தது | 50,000 |
| அறைகலன் விற்றது | 16,000 | விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 33,000 |
| [ஏட்டு மதிப்பு ₹ 17,000] | | இருப்பு கீ/இ கைரொக்கம் | 10,000 |
| | 1,45,000 | | 1,45,000 |

(அல்லது)

ஆ) இராஜேஷ் என்பவரின் பின்வரும் விவரங்களிலிருந்து 2019 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாப–நட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | 31.3.2018 ₹ | 31.3.2019 ₹ |
|---|---|---|
| சரக்கிருப்பு | 2,20,000 | 1,60,000 |
| கடனாளிகள் | 5,30,000 | 6,40,000 |
| வங்கி ரொக்கம் | 60,000 | 10,000 |
| இயந்திரம் | 80,000 | 80,000 |
| பற்பல கடனீந்தோர் | 3,70,000 | 4,20,000 |

பிற தகவல்கள்:

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வாடகை செலுத்தியது | 1,20,000 | கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 12,50,000 |
| பெற்ற தள்ளுபடி | 35,000 | எடுப்புகள் | 1,00,000 |
| அளித்த தள்ளுபடி | 25,000 | ரொக்க விற்பனை | 20,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 11,00,000 | 1.4.2018 அன்று முதல் | 5,20,000 |

43. அ) கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு.
அ) ஈட்டிய இலாபங்கள் 2016 ₹ 25,000; 2017 ₹ 23,000; மற்றும் 2018 ₹ 26,000
ஆ) 2016ல் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 2,500 சேர்ந்துள்ளது.
இ) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 –ம் ஆண்டின் இலாபத்தில் ₹ 3,500 குறைக்கப்பட்டது.
ஈ) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை ஆனால் எதிர் காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ₹ 250 என மதிப்பிடப்பட்டது.
மூன்று ஆண்டுகள் சராசரி லாபத்தில் இரண்டு ஆண்டு கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பை கணக்கிடவும்.

(அல்லது)

ஆ) ரோஜா, நீலா மற்றும் கனகா என்ற கூட்டாளிகள் 4:3:3 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2017 ஏப்ரல் 1 அன்று ரோஜா என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின் போது கீழ்க்கண்ட சரிகட்டுதல்கள் செய்வதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டன.
1) கட்டடத்தின் மதிப்பில் ₹ 30,000 அதிகரிக்க வேண்டும்.
2) சரக்கிருப்பு மதிப்பில் ₹ 5,000 மற்றும் அறைகலன் மதிப்பில் ₹ 12,000 குறைக்க வேண்டும்.
3) கொடுபடா பொறுப்புகளுக்கு ₹ 1,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.
குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து, மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.

44. அ) A வரையறு நிறுமம் 50,000 சாதாரண பங்குகளை பங்கொன்று ₹ 10 வீதம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹ 2 ஒதுக்கீட்டின் போது ₹ 4 முதலாவது அழைப்பின் போது ₹ 2 மற்றும் இறுதி அழைப்பின் போது ₹ 2 செலுத்தப்பட வேண்டும் அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன மற்றும் தொகைகளும் முறையாக பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

(அல்லது)

ஆ) B நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு அறிக்கையைத் தயாரிக்கவும்.

| விவரம் | 2016–17 ₹ | 2017–18 ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 60,000 | 90,000 |
| இதர வருமானம் | 8,000 | 12,000 |
| செலவுகள் | 20,000 | 30,000 |
| வருமான வரி | 30% | 30% |

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



45. அ) பின்வரும் விவரங்களைக் கொண்டு சிவா வரையறு நிறுவத்தின் மார்ச் 31, 2016 மற்றும் மார்ச் 31, 2017க்கான பொது அளவு வருவாய் அறிக்கையினை தயார் செய்யவும்.

| விவரம் | 2015–16 ₹ | 2016–17 ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 2,00,000 | 3,00,000 |
| இதர வருமானம் | 25,000 | 75,000 |
| செலவுகள் | 2,50,000 | 1,50,000 |
| வருமான வரி % | 40 | 40 |

(அல்லது)

ஆ) கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து நடப்பு விகிதம் மற்றும் விரைவு விகிதம் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| சரக்கிருப்பு | 4,00,000 | கடனீந்தோர் | 1,60,000 |
| கடனாளிகள் | 2,40,000 | நிலைச் சொத்துகள் | 10,00,000 |
| குறுகிய கால முதலீடுகள் | 80,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,00,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 1,60,000 | கொடுபட வேண்டிய செலவுகள் | 40,000 |
| ரொக்கம் | 20,000 | நீண்டகால பொறுப்புகள் | 6,00,000 |

46. அ) கீழ்க்கண்ட நிலைகளில் இயக்க இலாப விகிதம் காணவும்:

**நிலை 1:** விற்பனை மூலம் பெற்ற வருவாய் ₹ 10,00,000; இயக்க இலாபம் ₹ 1,50,000

**நிலை 2:** விற்பனை மூலம் பெற்ற வருவாய் ₹ 15,00,000; இயக்க அடக்கம் ₹ 12,00,000

**நிலை 3:** விற்பனை மூலம் பெற்ற வருவாய் ₹ 20,00,000. மொத்த இலாபம் விற்பனை மூலம் பெற்ற வருவாயில் 30% இயக்கச் செலவுகள் ₹ 4,00,000

(அல்லது)

ஆ) Tally ERP 9–ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்.

47. அ) ஜோன்ஸ் நிறுமத்தின் பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து
1) மொத்த இலாப–விகிதம் 2) நிகர இலாப விகிதம் 3) இயக்க அடக்க விலை விகிதம்
4) இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்

**இலாப–நட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| I விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் | 4,00,000 |
| II இதர வருமானம்: | |
| முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானம் | 4,000 |
| III மொத்த வருவாய் (I + II) | **4,04,000** |
| IV செலவுகள்: | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 2,10,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | 30,000 |
| நிதிகள் செலவுகள் | 24,000 |
| இதர செலவுகள் [நிர்வாக மற்றும் விற்பனை] | 60,000 |
| மொத்த செலவுகள் | **3,24,000** |
| V வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (III) – (IV) | **80,000** |

(அல்லது)

ஆ) ஜேம்ஸ் நிறுமத்தின் பின்வரும் 31.03.2019 –ம் நாளைய இருப்புநிலைக் குறிப்பிலிருந்து கீழ்க்காணும் விகிதங்களைக் கணக்கிடவும்.
1) புற அக பொறுப்பு விகிதம் 2) உரிமையாளர் விகிதம் 3) முதல் உந்துதிறன் விகிதம்

| விவரம் | தொகை ₹ |
|---|---|
| I பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்: | |
| 1) பங்குதாரர் நிதி: | |
| அ) பங்கு முதல் | |
| நேர்மைப் பங்கு முதல் | 2,50,000 |
| 6% முன்னுரிமைப் பங்கு முதல் | 2,00,000 |
| ஆ) காப்புகள் மற்றும் மிகுதி | 1,50,000 |
| 2) நீண்டகாலப் பொறுப்புகள்: | |
| நீண்ட காலக்கடன்கள் [8% கடனீட்டுப் பத்திரங்கள்] | 3,00,000 |
| 3) நடப்புப் பொறுப்புகள்: | |
| வங்கியிலிருந்து பெற்ற குறுகிய கால கடன்கள் | 2,00,000 |
| கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 1,00,000 |
| மொத்தம் | **12,00,000** |
| II மொத்தம்: | |
| 1) நீண்டகாலச் சொத்துகள்: | |
| நிலைச் சொத்துகள் | 8,00,000 |
| 2) நடப்புச் சொத்துகள்: | |
| அ) சரக்கிருப்பு | 1,20,000 |
| ஆ) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் | 2,65,000 |
| இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள் | 10,000 |
| ஈ) இதர நடப்புச் சொத்துகள்: | |
| முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 5,000 |
| மொத்தம் | **12,00,000** |

\- - - - -

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com